தென்னார்க்காடு மாவட்ட ஓவியங்கள்

ம. காந்தி எம்.ஏ., (வரலாறு) எம்.ஏ., (தமிழ்) டிப். சமஸ்கிருதம்
[டிப். தெலுங்கு.

வெளியிடுபவர்:
இரா. திருமங்கைமன்னன்
கடலூர்-1.

பிழை திருத்தம்

	பிழை	திருத்தம்
4-வது பக்கம் 1-ம் பத்தி 7-வது வரி	பனைமலை	பனமலை
4-வது பக்கம் 3-ம் பத்தி 6-வது வரி	தாருகாவண	தாருகாவன
5-வது பக்கம் 2-ம் பத்தி 1-வது வரி	தாருகாவண	தாருகாவன
5-வது பக்கம் 2-ம் பத்தி 1-வது வரி	தறுகனை	தறுகணை
5-வது பக்கம் 2-ம் பத்தி 5-வது வரி	முந்தானை	முந்தாணை
6-வது பக்கம் 2-ம் பத்தி 4-வது வரி	நுணி	நுனி
6-வது பக்கம் 2-ம் பத்தி 14-வது வரி	நீல	நீள
8-வது பக்கம் 1-ம் பத்தி 14-வது வரி	பனைமலை	பனமலை
	மண்டலச்	நாட்டுச்

ஜி. இராமகிருஷ்ணன்,
இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர்
தென்னார்க்காடு மாவட்டம்.

கடலூர்-607 001.

தேதி 26. 5. 93.

அணிந்துரை

தென்னார்க்காடு மாவட்டம் பல இயற்கை வளங்களைக்கொண்டது. மாவட்டத்தில் மேற்குப்பகுதியில் மலை வளமும், கான் வளமும், கிழக்குப் பகுதியில் கடல் வளமும் தன்னகத்தே கொண்டது. விவசாய தொழில் பெருமளவில் நடைபெறுகின்றது நெய்வேலி, கடலூர் நகரங்களில் மத்திய மாநில அரசு சார்புடைய தொழில் நிறுவனங்கள் பல இருக்கின்றன. நம்மாவட்டத்தின் ஊர் தோறும் நாயன்மார்களால் பாடல் பெற்ற பெரும் சிறப்பினை உடைய திருக்கோயில்கள் உள்ளன. மாவட்டத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட காலக் குகை ஓவியங்கள் விழுப்புரம், திருக்கோயிலூர், செஞ்சி வட்டங்களில் காணப்படுகிறது. சிதம்பரம், திட்டக்குடி, செஞ்சி, வீடூர் போன்ற இடங்களில் வரலாற்று கால ஓவியங்கள் சித்தரிக்கப்பட்டுள்ளன. இவைகள் நம் முன்னோர்களுடைய சிறப்புமிகு வரலாற்றையும் பண்பாட்டையும் செப்புகின்றன. இந்தச் சிறிய நூலில் நம் மாவட்டத்தில் காணக்கிடைக்கும் ஓவியங்களை கடலூர் அரசு அருங்காட்சியகத்தின் காப்பாட்சியர் திரு. ம. காந்தி தொகுத்தளித்திருக்கின்றார். காப்பாட்சியரின் முயற்சிக்கு பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒ-ம்.
ஜி. இராமகிருஷ்ணன்,
இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர்,
தென்னார்க்காடு மாவட்டம்.

முன்னுரை

வரலாற்றிலும் கோயில்-கலைகளிலும் சிறந்து விளங்கும் தென்னார்க்காடு மாவட்டத்தில் இருக்கின்ற ஓவியங்கள் எங்கெங்குக் காணப்படுகின்றன என்பதை அனைவரும் அறிந்துகொள்ள ஏதுவாக இருக்கும் வகையில் இந்தச் சிறிய தொகுப்பை எழுத ஆவல் கொண்டேன். இந்நூலுக்கு சீரிய அணிந்துரை அளித்துள்ள தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கு. இராமகிருஷ்ணன், இ. ஆ. ப. அவர்களுக்கு என்னுடைய மனங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். பல்வகையிலும் எங்களை நல்வழிப்படுத்தி வருகின்ற அருங்காட்சியகத்துறையின் இயக்குனர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அட்டை வரைபடமான பனைமலை ஓவியத்தை வரைந்த மாதிரி அமைப்புக்கலைஞர் திரு. சு. மனோகரன் அவர்களுக்கு நன்றியை தெரிவிக்கின்றேன். குறிப்பிட்ட நேரத்தில் அழகாக இந்நூலை வெளிக்கொண்டுவர உதவிய கடலூர் இந்தியா பிரிண்டர்ஸ் நிறுவனத்தாருக்கும் நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

ம. காந்திஎம்.ஏ., (வரலாறு) எம்.ஏ., (தமிழ்) டிப்.சமஸ்கிருதம் [டிப்.தெலுங்கு]

தென்னார்க்காடு மாவட்ட ஓவியங்கள்

இயற்கையின் படைப்புகளைப் பார்த்து மனதைப் பறி கொடுக்கின்றோம். அதை நினைவில் நிறுத்திக் கொள்ள விழைகிறோம். அவ்வாறு நிறுத்திக்கொள்ள இன்று மனிதன் நிழல்படம் எடுத்துக்கொள்கிறான். நிழல்படக் கருவி இல்லாத முன்நாள்களில் ஓவியம் உறுதுணையாக இருந்தது. ஓவியம் அறிவு வளர்ச்சிக்கும் கல்வியின் பெருக்கததிற்கும் அடிப்படையானது. இயற்கையை மட்டும் படம் பிடிக்க ஆவல் கொள்ளவில்லை மனிதன். இறைவனையும் படமாக்கி வணங்கவும் மனதில் நிறுத்தவும் ஓவியம் பயன் பட்டது. பயன்படுகின்றது. கோடுகளின் கூட்டமே ஓவியமாகின்றது.

தென்னார்க்காடு மாவட்டம் ஓவியத்தில் சிறப்பிடத்தைப் பெற்றுள்ளது. வரலாற்றுக்கு முற்பட்ட கால (கி. மு. 5000)க்குகை ஓவியங்களையும் பல்லவர்கால ஓவியங்களையும் கி. பி. 17 ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த நாயக்கர்கால ஓவியங்களையும் தன்னகத்தே கொண்ட பெருமைமிக்க மாவட்டம்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலக் குகை ஓவியங்கள் தளத்தை சமன் செய்யாமல் அப்படியே வண்ணங்களால் தீட்டப்பட்டன. ஆனால் வரலாற்றுக் காலத்தில் மரம், பட்டுச்சுருள்களைவிட சுவர் வசதியாகவும் நிலையானதாகவும் கருதப்பட்டது. அந்த சுவர் தளத்தில் ஓவியம் தீட்ட ஏற்ற சமதளமாக்கச் சுண்ணாம்புத் தூள், மணல், வைக்கோல்தூள், கடுக்காய் போன்றவற்றைச் சேர்த்துப் பூசப்பட்டது. தாவரப் பொருள்களிலிருந்தும் கனிமப் பொருள்களிலிருந்தும் சிவப்பு, நீலம், வெள்ளை, கருப்பு, மஞ்சள் ஆகிய வண்ணங்களை விலங்கினத் தாவர பிசின்களுடன் குழைத்து ஓவியங்கள் தீட்டப்பட்டன.

வரலாற்றுக்கு முற்பட்ட கால ஓவியங்கள் :

வரலாற்றுக்கு முற்பட்ட கால ஓவியங்கள் திருக்கோவிலூர் வட்டம், செஞ்சி வட்டம், விழுப்புரம் வட்டம் ஆகியவற்றில் பாறைக் குகைகளில் காணப்படுகின்றன இந்த ஓவியங்கள் இந்திய, உலக ஓவியங்களுடன் ஒப்புமை உடையனவாகும்.

கீழ்வாலை : அத்தியூர் - விழுப்புரம் - திருவண்ணாமலைப் பேருந்து சாலையில் உள்ள ஊர். இங்குள்ள ஓவியங்கள் ஆப்ரிகா எகிப்து, அமெரிக்கா, கிரீஸ் சீனா போன்ற நாடுகளுடன் பண்பாட்டில் தொடர்புடையனவாகத் தெரிகின்றன.

செத்தவரை : விழுப்புரம் - திருவண்ணாமலைப் பாதையில் வேட்டவலத்திலிருந்து வடக்கே 8கி மீ.தூரம். செஞ்சி -திருவண்ணா மலைப் பாதையில் நல்லாண் பிள்ளை பெற்றாள் குறுக்குப்பாதையிலிருந்து 10 கி.மீ, தொலைவில் உள்ளது.

அத்தியூர் : விழுப்புரம் - திருவண்ணாமலைச் செல்லும் வழியில் ஓதியத்தூரிலிருந்து சுமார் 3 கி.மீ. இங்கு மனித, மீன், விலங்கு, வீடு, பறவை ஆகிய ஓவியங்கள் காணப்படுகின்றன.

பாடியந்தல் : திருக்கோவிலூருக்கு தென்மேற்கில் சுமார் 18 கி. மீ. தூரத்தில் உள்ளது. இவ்வூரின் பாறையின் மேல்புறத்திலும் கீழ்ப்புறத்திலும் மான்தோல் போன்ற ஓவியம் உள்ளது.

கொல்லூர் : திருக்கோவிலூருக்கு வடகிழக்கில் (அரகண்ட நல்லூர் வழியாக) சுமார் 7கி.மீ. தொலைவு இங்குள்ள ஓவியங்கள் கோடுகளால் ஆனவை. உடும்பு போன்ற உருவ ஓவியங்கள் இருக்கின்றன.

ஆலம்பாடி : திருக்கோவிலூருக்கு வடகிழக்கில் (அரகண்ட நல்லூருக்கு அருகில்) சுமார் 15 கி மீ. தூரம் இங்குள்ள மலையில்

மான், எருது, மீன், மயில், காட்டுப்பன்றி, காண்டாமிருகம் ஆகியனவும் கோட்டாலான மனித ஓவியங்களும் காணப்படுகின்றன. செடி கொடிகளுக்கு இடையில் மான் மறைந்திருக்கின்ற நிலையில் ஓவியமும் உள்ளது. கீழ்வாலை ஓவியங்களில் கிடைக்கும் குறியீடுகள் சிந்துசமவெளியில் கண்டெடுத்த முத்திரைகளில் காணப்படும் வரி வடிவங்களைப் போலுள்ளதால் பண்பாட்டுத் தொடர்பிருக்க வேண்டும் என அறிஞர்கள் கருதுகின்றனர்.

'வரலாற்றுக்காலம் :

பாலப்பட்டு : செஞ்சி வட்டத்தைச் சேர்ந்தது. விழுப்புரம்-செஞ்சி சாலையில் 20 கி. மீ. தூரத்தில் உள்ளது. பாலப்பட்டு கிராமத்திற்கு கிழக்கில் உள்ள மலைக் குகையில் வரலாற்றுக்கு ~~முற்பட்ட~~ கால ஓவியங்கள் அன்மையில் கண்டுபிடிக்கப்பட்டன. அதே ஊரில் ஆகாசக்கோட்டை என்று அழைக்கப்படும் இடத்தில் குகைக்கு உள்ளே சுண்ணாம்பு சாந்து பூசிய சுவரில் பாவை விளக்கு ஓவியங்கள் காணப்படுகின்றன.

பனமலை: விழுப்புரம் வட்டத்தில் அனந்தபுரத்திற்கு அருகில் உள்ள ஊர் இந்த ஊரில் பல்லவமன்னன் இராஜசிம்மன் ஒரு கட்டு மான கோயிலைக் கட்டினான் அந்த கோயிலுக்கு தாளகிரீஸ்வரர் அல்லது குன்றுடையார் கோயில் எனப் பெயர். அந்தக் கோயிலில் அனைவரையும் கவர்ந்திழுக்கத்தக்க எழில்மிகு வண்ண ஓவியம் தீட்டியுள்ளான். அது பார்வதி தேவியின் உருவமாகும் ஓவியத்தின் தன்மை பல்லவர் காலக் கற்சிற்பத்தினை நமக்கு நினைவூட்டுகின்றது. தேவியின் மேலே இருக்கும் பல்லவர் காலச் சாந்துக் கவிகையின் கீழ்புறமுள்ள அலங்கார முறைகள் வியப்பில் ஆழ்த்துமளவிற்கு உள்ளது. கிரீடம் அழகுபடுத்தப்பட்டு அதில் தொங்கும் முத்து மாலைகள் செல்வச் செழிப்பையும் கலையில் உள்ள வனப்பையும் பகர்கின்றது. தெய்வத் தன்மையைக் காட்டும் நீள் விழிகள் பல்லவர் கால நீண்ட கண்களுக்கருகில் அகன்று நீண்டும் உள்ள முகம் பல்லவம் பாணியைக் காட்டுகின்றன. வலது கையை வலது தோள் -மேல் வைத்திருப்பதும் முக சாயலும் நிற்கும் நிலையும் தேவியின் பார்வையும் மயங்கி நிற்கும் தன்மையைக் காட்டுகின்றது. கழுத்தில் உள்ள மாலைகளும் கீழாடை ஆகியன கோடுகளால் நன்கு காண்-பிக்கப்பட்டிருக்கின்றன. இடையில் கட்டியிருக்கும் கீழாடை

பூவேலைப்பாடுடையது. அது தொடைகளை இறுக்கமாக பிடித்திருப்பதாக ஓவியம் தீட்டப்பட்டுள்ளது. தேவியின் வயிற்றுப் பகுதியில் ஓவியம் காலத்தின் கோலத்தால் சிதைந்துவிட்டுள்ளது. தேவி சிவனுடைய ஆனந்த தாண்டவத்தைப்பார்த்துத் திளைத்துத் தன்னை மறந்த நிலையில் இடதுகாலை மடக்கிச் சுவரில் வைத்து சுவரில் சாய்ந்து இருப்பதாக அறிஞர்கள் கருதுகின்றனர். (பனைமலை ஓவியம் அட்டையில் வரைபடமாகத் தரப்பட்டுள்ளது.)

திட்டக்குடி : திட்டக்குடி என்ற ஊர் அதே பெயருடைய வட்டத்தின் தலைநகரம். தென் ஆர்க்காட்டின் தென் எல்லையாகப் பாய்ந்தோடும் வெள்ளாற்றின் வடகரையில் திட்டக்குடி அமைந்துள்ளது. இந்நகரம் கடலூரில் இருந்து விருத்தாசலம் வழியாக 93 கி.மீ. ஆகும். திட்டக்குடி நகரின் மையத்தில் வைத்தியநாத ஸ்வாமி என்ற சிவன் கோயில் கட்டப்பட்டுள்ளது. இக்கோயில் இரண்டாம் இராஜராஜ சோழனால் கட்டப்பட்டதாகும். இந்தக் கோயிலின் ஆடலரசர் திருமுன்னருக்கு எதிரில் உள்ள மண்டபத்தின் விதானத்தில் 27 பாகங்களை உடைய வண்ண ஓவியங்கள் கி.பி. 17 ஆம் நூற்றாண்டில் தீட்டப்பட்டிருக்கின்றன. முதல் பதினான்கு பாகங்கள் ஆடலரசர் திருமுன்னருக்கு அருகில் உள்ளவை. அவைகள் அனைத்தும் வசிஸ்டர் திட்டக்குடியுடன் தொடர்புடையதை வண்ண ஓவியங்களாக தீட்டப்பட்டிருக்கின்றன. இதில் உள்ள பெண் தெய்வங்களின் உருவங்களுக்குக் கரண்ட மகுடமும், மூக்கில் புல்லாக்கும் காணப்படுகின்றன. கீழ் ஆடை மற்ற நாயக்கர் கால ஓவியங்களில் காணப்படும் பெண் தேவதைகளின் கீழ் ஆடை போல இருப்பினும் கீழ் ஆடையில் இடையிடையே இரண்டு வரிசை மணிமாலைகள் குறுக்காகச் சென்று எழிலூட்டுகின்றன.

வசிஸ்டர் கதையில் வரும் காமதேனுவின் தொடைகளில் லிங்கமும் சூலமும் தீட்டப்பட்டிருக்கின்றன. காமதேனுவின் நீலமான கொம்புகள் அழகாக இல்லை. இந்தக்கதையில் வரும் கௌசிக மகாராஜன் வேட்டைக்குச் செல்லும் போது தலையில் துணியைக் கட்டிச் செல்லுகின்றான். இந்த புராண கதைக்கும், அடுத்து வரும் தாருகாவண புராணக் கதைக்கும் இடையில் பெரிய தாமரைப்பூ வரைந்து அதன் கிழக்குப்பக்க மூலைகளில்

ஒரு பெண் வீதம் இருவர் அன்னத்தை கொஞ்சுதல் போலவும் மேல் பக்க மூலைகளில் ஆண்கள் சாமரம் வீசுவதாகவும் தீட்டப் பட்டிருக்கின்றன. இந்தப்பகுதி, உள்கோபுரத்தின் வாயிலுக்கு அருகில் இருக்கின்றது.

இதனை அடுத்து தாருகாவணத்து முனிவர்களின் தறுகனை சிவன் பிட்சாடனர் உருவமாகவும் திருமால் மோகினி உருவமாக-வும் மாறிச் சென்று மயக்கி அடக்கும் காட்சிகள் பதின்மூன்று பாகங்களாக்கி தீட்டப்பட்டிருக்கின்றன. பெண் உருவங்களின் முந்தானையின் முனை காற்றில் பறப்பது போல் காட்டப்பட்டிருக் கின்றது. மொத்த ஓவியத்தின் வெளி எல்லை தாமரை மலரால் தீட்டி உட்பிரிவுகளை கயிறு போன்ற அமைப்பு ஓவியத்தால் பிரித்துக் காண்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த அமைப்பு சிதம்பரம் ஓவியத்தில் காணவில்லை மொத்த ஓவியத்தின் நீள அகலம் 21½ மீட்டர் × 3மீட்டர்.

செஞ்சி

ராஜகிரி கமலக்கண்ணியம்மன் திருக்கோயில்: செஞ்சி வட்டம் திண்டிவனத்திற்கு மேற்கில் அமைந்திருக்கின்றது. இதன் தலைநகர் செஞ்சி நகரமாகும். திண்டிவனத்திலிருந்து 24 கி. மீ. தூரம் செஞ்சியின் மேற்கில் 1 கி.மீ. தொலைவில் திருவண்-ணாமலைச் சாலையின் தெற்கில் ராஜகிரி கோட்டை இருக்கின்றது. அந்த மலையின் மொத்த உயரத்தின் நடுப்பகுதியில் கமலக் கண்ணியம்மன் ஆலயம் உள்ளது. அதன் பின் புலத்தில் நெடிய பாறை எழுகின்றது. அந்தப் பாறையின் குழிந்தச் செங்குத்துப் பகுதியில் நாயக்கர் கால (கி. பி. 17 ஆம் நூற்றாண்டின்) திருமால் ஓவியம் நிற்கின்ற நிலையில் தீட்டப்பட்டிருக்கின்றது. தன்னுடைய ஆயுதங்களான சங்கு சக்கரங்கள் கர்த்தரிமுக முத்திரையில் கை-களில் இருக்கின்றன. திருமாலுக்கு வலது பக்கத்தில் திருமகள் தம்முடைய இடது கையில் பெரிய தாமரையை பிடித்து நிற்கிறாள். திருமாலுக்கு இடது பக்கத்தில் பூமகள் தம்முடைய வலது கையில் நீலோத்பவ மலரை ஏந்தியுள்ளாள். பூமகளுக்கு குச்ச பந்தம்

கட்டப்பட்டுள்ளது. பொதுவாக மூவருடைய கீழ் ஆடைகளின் விளிம்புகள் விசிறிபோல் விரிந்து இருப்பதாக வண்ண ஓவியம் தீட்டப்பட்டிருக்கின்றது. திருமால் மாலை அணிந்திருக்கின்றார். அந்த மாலையின் நுணியில் தாழம்பூ இதழ்போன்று தீட்டப்பட்டிருக்கின்றது. இதே பாணி கர்நாடகத்தில் இருக்கின்ற லேபாஷி ஓவியங்களில் காணப்படுகின்றது. இந்த மூவர் உருவமும் ஒரு அலங்காரப் பந்தலின் கீழ் நிற்பது போன்று தீட்டப்பட்டிருக் கின்றது. மேல் பகுதியிலிருந்து திரைச்சீலையும் பூமாலைகளும் தொங்குகின்றன. திருமாலின் தலைக்கு இரண்டு பக்கங்களிலும் குழந்தை உருவில் ஒருவர் வீதம் திருமாலைப் போற்றுகின்றனர். மேல் மூலைகளில் ஒரு தேவ ஆண் உருவம் வீதம் இருவர் பூ சொரியும் பாணியில்கைகள் வரையப்பட்டிருக்கின்றன. இந்த ஓவியத்தின் அளவு சுமார் 5’×5’ ஆகும். இந்த வண்ண ஓவியத்திற்கு இடது பக்கத்தில் 1½ அடி அகல நீலத்தில் நாட்டிய உருவம் தீட்டப்பட்டிருக்கின்றது. முகமும் இடது கைகளும் சிதைந்துள்ளன. இரண்டு வலது கைகள் மட்டும் சிதையாமல் இருக்கின்றன. திருமால் ஓவியத்திற்கு வலது பக்கத்தில் மிகவும் சிதைந்த ஓவியம் இருக்கின்றது. முகம் நரசிம்மர் எனக்காட்டுகின்றது. கால்கள் யோக நிலையில் அமர்ந்துள்ளதை கூறுகின்றன. நரசிம்மருக்கு மேலே தோரண வேலைப்பாடு தீட்டப்பட்டிருக்கின்றது.

சிதம்பரம் : இதே பெயரை உடைய வட்டத்தின் தலைநகரம். இந்த வட்டத்தின் தென் எல்லை கொள்ளிடமும், கீழ் எல்லை வங்கக் கடலுமாம் சிதம்பரம் கடலூரில் இருந்து தெற்கே 50 கி.மீ. தூரம் சைவர்களுக்குக் கோயில் என்றால் சிதம்பரம் ஆலயமாகும். இது சோழர்களாலும் பாண்டியர்களாலும் விஜய நகர மன்னர்களாலும் அவ்வப்பொழுது கட்டப்பட்டு இன்றுள்ள அளவிற்குத் திகழ்கின்றது. இங்குள்ள சிவகாமி அம்மன் கோயிலின் முன் மண்டபத்தில் ஐந்து பிரிவுகளில் ஓவியங்கள் கீழ் மேலாக உள்ளன. அகன்ற நடுப்பகுதி தேவி மகாத்மியத்தின் ஓவியம் இந்நூற்றாண்டில் பெரிய பெரிய அளவில் தீட்டப்பட்டுள்ளது. ஆனால் தெற்கில் உள்ள இரண்டு பிரிவுகளில் மூன்று ஆனந்த தாண்டவர் உருவம்

தீட்டப்பட்டிருக்கின்றன. ஒரு இடத்தில் சிவன்-பார்வதியை குமார சாமி தம்பிரான் வணங்குகின்றார். அடுத்த பிரிவில் நடராஜரைத் திருமால் வணங்குகின்றார். திருமாலுக்குப் பின்பக்கத்தில் நெடிய உருவமாகத் தீட்டப்பட்ட தம்பிரான் நடராஜரை வணங்குகிறார். அடுத்ததாக மயிலை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவானைக்கா போன்ற கோயில்கள் சித்தரிக்கப்படுகின்றன. வேறுபல வண்ண ஓவியங்களும் இப்பிரிவுகளில் காணப்படுகின்றன. மண்டபத்தின் வடக்கில் உள்ள இரண்டு பிரிவுகளில் வியாக்ரபாதர் உபமன்யு வரலாறும் தாருகாவன வரலாறும் தீட்டப்பட்டிருக்கின்றன. ரிஷிகள் பிட்சாடனர் உருவில் வந்திருக்கும் சிவனை அழிக்க யாகம் செய்து யானை, புலி, பாம்பு போன்றவற்றை உருவாக்கும் காட்சிச் சிறப்பாக உள்ளது. இந்த ஓவியங்கள் 17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும்.

சிதம்பரம், திட்டக்குடி ஓவியங்களின் ஒவ்வொரு பிரிவிற்கும் நிகழ்ச்சியின் குறிப்பு எழுதப்பட்டிருக்கின்றது மரங்கள் வரைவதில் கிளைகள் கொத்தாகவும் அடர்த்தியாகவும் வளர்ந்திருப்பது போலக் காண்பிக்கப்பட்டிருக்கின்றது. சிறிய செடிகள் பூக்கிண்ணத்தில் வைத்த கிளைகள் போலத் தீட்டப்பட்டுள்ளன. சிதம்பரம் ஓவியங் களின் ஆடையை ஒத்திருக்கின்றன. நாயக்கர் காலத்தின் ஆண்க ளின் அகன்ற மார்பை ஒரு கோடு இழுத்துக் காட்டப்பட்டிருக்கின்றது. பெண்களுக்குக் குறுகிய இடைத்தீட்டப்பட்டிருக்கின்றது. கண்கள் நீளமாக உள்ளன. கீழ் ஆடைகளின் விளிம்புகள் விசிறி போலுள்ளன. நிற்கும் உருவங்களின் இடுப்புப் பகுதி பின்பக்கமாக வும் தலையும் காலும் முன்பக்கமாகவும் இருப்பது போல் தீட்டப் பட்டிருப்பது பணிவைத் தெரிவிக்கின்றது.

திருக்கண்டேஸ்வரம் : கடலூரில் இருந்து மேற்கே 13 கி.மீ. தொலைவில் உள்ளது. இவ்வூர் இங்குள்ள நடன பாதீஸ்வரர் திருக்கோயிலின் அர்த்தமண்டபத்தின் நுழைவாயிலுக்கு மேல் இரண்டு அந்தணர்கள் லிங்கபூஜை செய்வது போன்ற ஓவியம் தீட்டப்பட்டுள்ளது. இது சென்ற (19 ஆம்) நூற்றாண்டைச் சேர்ந்தது எனலாம்.

கல்யாணம் பூண்டி : விழுப்புரத்திலிருந்து தும்பூர் வழியாக அனந்தபுரம் செல்லும் சாலையில் இருக்கின்றது. இங்குள்ள சிவன் கோயிலில் கி. பி. 19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஓவியம் காணப்படுகின்றது.

பெருமண்டூர் : திண்டிவனத்திலிருந்து சுமார் 20 கி. மீ. தென் மேற்கிலுள்ளது இவ்வூர். பெருமண்டூரில் கி.பி. 9 ஆம் நூற்றாண்டு முதல் சமணம் வளர்ந்திருக்கிறது. இந்த ஊரின் சந்திரநாதர் கோயிலின் கருவறையின் உள்சுவரில் ஓவியங்கள் காணப்படுகின்றன. இவை சித்தாமூரில் வீரசேனாச்சாரியார் சைனமடம் ஏற்படுத்தியதை விளக்குகிறது. வீரசேனரால் மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர் என்பதை ஓவியம் சித்தரிக்கின்றது.

வீடூர் : விழுப்புரம் - திண்டிவனம் தேசிய நெடுஞ்சாலையின் அருகில் அமைந்துள்ள இவ்வூரின் ஆதிநாதர் கோயிலின் மண்டபத்தில் கி. பி. 19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. மற்ற ஊர் கோயில்களில் வரிசை வரிசையாகத் தீட்டப்பட்டுள்ளவாறு இங்கும் சமனசமயப் புராண நிகழ்ச்சிகள். வடிக்கப்பட்டுள்ளது. இவை ரிஷபநாதர், மகாவீரர் ஆகியோரது வாழ்க்கை வரலாற்றுடன் தொடர்புடையவை ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் தமிழில் குறிப்பு எழுதப்பட்டுள்ளது. சிதம்பரம் திட்டக்குடி கோயில்களிலும் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது.

பயன்பட்ட நூல்கள்

1. South Indian Paintings. C. Sivaramamurti.
2. இந்திய ஓவியம். சி. சிவராமமூர்த்தி.
3. தென்னார்க்காடு பழமை ஓவியங்கள், அனந்தபுரம் கோ. கிருட்டினமூர்த்தி, மஞ்சரி, பிப்ரவரி 1990.
4. பல்லவன் கண்ட பனைமலைக்கோயில் ந. வெங்கடேசன்.
5. தொண்டை மண்டல சமண கோயில்கள், டாக்டர் ஏகாம்பரநாதன்.

சிதம்பரம், பிட்சாடனரும் - மோகினியும் கி.பி. 17ஆம் நூற்றாண்டு.